# மெட்ரோ மருத்துவ முகாம் மூலம் 5 ஆயிரம் பேர் பயன்பெற்றனர்

## அதிகாரி தகவல்

சென்னை, மார்ச் 1: மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெற்ற மருத்துவ முகாம் மூலம் 5,200 பேர் பயனடைந்துள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில்வே அதிகாரி கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து, கடந்த 24ம் தேதி முதல் 28 வரையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தியது. இது, சென்ட்ரல், டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் நிலையங்களில் நடைபெற்றது.

மேலும், பி.எம்.ஐ, இரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை ஆகியவை குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மொத்தம் 5 நாட்கள் நடைபெற்ற இந்த மருத்துவ முகாம் மூலம் 5,200 பேர் பயனடைந்துள்ளனர். இவ்வாறு கூறினார்.